| அசல் வழக்கு எண்.55/2018 | வா. சா . 2 | தேதி.18,10..2022 | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ரவிக்குமார் | வயது | 42 |
| த/பெ. | திரு.ரங்கசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| முகவரி | 1/56, கூரனூர், மேடுர் அஞ்சல்,<br>கெம்மாரம்பாளையம்<br>மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலையில் உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை

1. எனக்கு உடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் எனக்கு வேல்முருகன் என்ற தம்பியும் தீபாமகேஸ்வரி என்ற தங்கையும் உள்ளார்கள். என் தம்பி வேல்முருகன் திருமணம் ஆகாமல் இறந்து விட்டார். என் அம்மா பத்திரம்மாள் உயிருடன் உள்ளார். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளோம் என்றால் வருவாய் அதிகாரிகள் தக்க அறிவிப்பு இல்லாமல் பட்டா நிலத்திலுள்ள வீட்டை இடித்து விட்டதால் நஷ்டஈடு கேட்டு வழக்கு போட்டுள்ளோம். எந்த அளவிற்கு இடிக்கப்பட்டது என்றால் சுமாராக 5 அடி அகலமும் நீளம் 20 லிருந்து 22 அடியும் இருக்கும். அந்த இடம் புறம்போக்கு இடம் என்றால் சரியல்ல. அந்த இடம் புறம்போக்கு இடமா அல்லது பட்டா இடமா என்று நாங்கள் நிரூபிக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவின்பேரில்தான் வருவாய் அதிகாரிகள் செயல்பட்டார்கள் என்றால் சரிதான். ஆனால் அந்த உத்தரவின் நகலை நாங்கள் கேட்டோம். அவர்கள் தர மறுத்து விட்டார்கள்.

2. இடத்தில் எத்தனை நாட்களுக்கு முன்பாக உத்தரவின் நகலை கேட்டோம் என்றால் அந்த இடத்தில் ஜே சி பியை வைத்து இடிக்க வந்தபொழுது கேட்டோம். அதற்கு முன்பாக நாங்கள் கேட்கவில்லையா என்றால் அவர்கள் இடிப்பார்கள் என்று எங்களுக்கு தெரியாது. எந்த தேதியில் இடித்தார்கள் என்றால் தேதி எனக்கு தெரியவில்லை. அது ஒரு மே மாதம் ஆகும். 3 ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி தாசில்தாராக இருந்தார். 1,2 பிரதிவாதிகள் அவருக்கு கீழ் பணிபுரியும் அதிகாரிகள் என்றால் சரிதான். தாசில்தாரின் உத்தரவிற்கு மதித்து தான் 1, 2 பிரதிவாதிகள் நடக்க வேண்டும் என்றால் சரிதான். ஏதோ ஒரு உத்தரவு இல்லாமல் அவர்கள் நடக்கக்கூடாது. 1 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதியின் கீழ் பணிபுரியும் அலுவலர் என்பதால் அவரை நாங்கள் வழக்கில் சேர்த்திருக்கக்கூடாது என்றா ல் சரியல்ல. இவ்வாறு இடித்து விட்டதாக சொல்லி வேறு வழக்கு போட்டுள்ளோமா என்றால் போட்டுள்ளோம். இந்த பிரச்சினை குறித்து சுமார் எத்தனை வழக்குகள் போட்டுள்ளோம்

என்றால் நாங்கள் 5 வழக்குகள் போட்டிருப்போம்.

3. எந்த வழக்கிலும் இதுவரை தீர்ப்பாகவில்லை என்றால் சரிதான். நான் இந்த முகவரியில் பிறந்ததிலிருந்து குடியிருந்து வருகிறேன். என் தங்கையை தோலம்பாளையத்தில் கல்யாணம் செய்து கொடுத்தோம். அவரை திருமணம் செய்து கொடுத்து 4 ஆண்டுகள் ஆகிறது. திருமணம் ஆனதிலிருந்து அவர் தோலம்பாளையத்தில்தான் இருந்து வருகிறார். பிரதிவாதிகள் அரசு அலுவலகர்கள் என்பதாலும் நீதிமன்ற உத்தரவை அவர்கள் நிறைவேற்றியதாலும் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு உரிய அறிவிப்பு கொடுக்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி இறந்த பிறகு அவரது வாரிசுகளை சேர்க்க நாங்கள் மனு தாக்கல் செய்து, அம்மனுவில் அரசு பணியை அவர் செய்ததால் வாரிசுகளை சேர்க்கஇயலாதென இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அதனால் பிரதிவாதிகளுக்கெதிராக தனிப்பட்ட நபர் என்ற முறையில் வழக்கு தொடுக்க இயலாது என்றால் சரியல்ல. நான் சொல்லி உள்ள ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. அரசு புறம்போக்கு நிலத்தில் கட்டியிருந்த வீடுதான் இடிக்கப்பட்டது என்றும் நான் சொல்வதுபோல் பட்டா நிலத்தில் கட்டப்பட்ட வீடு எவ்வகையிலும் இடிக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. புறம்போக்கு நிலம் என்பதால்தான் வட்டாட்சியர் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றினார் என்றால் சரியல்ல. போதிய கால அவகாசம் கொடுத்தும் ஆக்கிரமிப்பை அகற்றாத காரணத்தால்தான் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற வேண்டியுள்ளது என்றால் சரியல்ல. கால அவகாசம் கொடுக்கவிலலை. கால அவகாசம் கொடுத்திருந்தால் அதை மதித்து நாங்களாகவே கண்டிப்பாக இடித்து கொடுத்திருப்போம். வட்டாட்சியர் 2, 3 முறை சொல்லி சென்றதாகவும் அதன்பிறகுதான் வழக்கு போட்டதாகவும் தன் தங்கை தனது முதல் விசாரணையில் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அறிவிப்பு கொடுக்கவில்லை என வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இடிக்கப்பட்டதாக சொல்லக்கூடிய நிலம் சாலை நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட இடம் என்றால் சரியல்ல. சேதமதிப்பு எதுவும் நாங்கள்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கும் எங்களுக்கும் எந்த விருப்பு வெறுப்பும் இல்லை என்றால் சரிதான். வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

P K SIVAKUMAR

Digitally signed by P K SIVAKUMAR
Date: 2022.10.18 19:07:08 +0530

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

SUB COURT, METTUPALAYAM